2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருத்தேர்கள் ஓடக்கூடிய பகுதிகளில் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று வரக்கூடிய ஆண்டுகளில் படிப்படியாக ஒவ்வோர் ஆண்டிலும் அதற்குரிய பணிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியினைப் பெற்று அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

பேருந்து பணிமனை

***10169—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடபழனி பேருந்து பணிமனையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வணிக வளாகங்களுடன் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல் திட்டத்தின்கீழ் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 16 பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களை நவீனப்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் குழும நிதி (TNIDB) உதவியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை

நிறுவனத்தின் (TNIFMC) ஒருங்கிணைப்புடன் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (DFR) தயாரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை தயாரானபின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 16 பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் வடபழனி பேருந்து பணிமனையையும் நவீனமயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினை அறிவித்தார்கள். பிறகு திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளைத் தொடர்ந்து, இன்று 3 முதல் 5 வயதுவரை உள்ள சிறுவர்களுக்கும் இலவச பேருந்துப் பயணத் திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி பேருந்து நிலையத்தை நவீனமயமாக்கப்படுவதாகத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல், கலைஞர் நகரில், தலைவர் பெயரைக் கொண்ட கலைஞர் நகர் பேருந்து பணிமனை 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பேருந்து நிலையமாகும். அங்குள்ள கட்டடங்கள் சிதிலமடைந்து இருக்கின்றன. ஓய்வறைகள் சிதிலமடைந்து இருக்கின்றன. 1,100 பணியாளர்கள் அங்கே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த கலைஞர் நகர் பேருந்து நிலையத்தையும் நவீனமயமாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் குழும நிதியுதவியுடன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், ஆலோசகர் M/s. Jones Lang Lasalle Property Consultants (India) Private Limited நியமிக்கப்பட்டு,

2022 மே 9]

விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. நில அளவையரைக் கொண்டு பணிமனை நிலங்களை, நிலம் அளவு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. Topographic survey, Perception survey, Traffic survey, Parking survey, Market survey *போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இடைக்கால சாத்தியக்கூறு அறிக்கை அக்டோபர் 2021-ல் சமர்ப்பிக்கப்பட்டது. இடைக்கால சாத்தியக்கூறு அறிக்கைக்குத் தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.*

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்ட வடபழனி பேருந்து பணிமனையை நவீனப்படுத்தப்படுவதுடன் பழமையான பணிமனை புதுப்பொலிவு பெற்று, பணியாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை ஏற்படுத்தி பேருந்து பராமரிப்புப் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு, பயணிகளுக்கு நல்ல போக்குவரத்து வசதி சேவை செய்வதற்கு வசதி ஏற்படுத்தப்படும்.

அவர் இப்போது கேட்டிருக்கின்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரிலான பணிமனையும், அதில் உட்படுத்தப்பட்டு அதையும் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கலைஞர் நகர் பணிமனையும் நவீனமயமாக்கப்படுவதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, மக்களின் பொழுதுபோக்கு இடங்கள் குறைவாக இருக்கின்றன. இங்கே 5 ஏக்கர் 92 சென்ட் இடம் இருக்கிறது; அங்கே 6 ஏக்கர் 57 சென்ட் இடம் இருக்கிறது. ஆகவே, அந்த பணிமனை/பேருந்து நிலையங்களில்* Food Court *ஏற்படுத்தினால் பொது மக்கள் அதைப் பயன்படுத்திக்கொள்வார்கள். மேலும் அரசுக்கும் வருமானமும் வரும். மேலும் அங்கு மேற்கத்திய நாடுகளில் உள்ளதுபோல்* colourful *ஆன விளம்பரப் பலகைகள் வைத்தால், அதிலும் அரசுக்கு வருமானம் வரும். மேலும், 18*M, *41*F, *37*D *ஆகிய பேருந்துகள் கடந்த காலங்களில் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையும் இயக்க வேண்டும்.* White Board *பேருந்துகளில்*

மகளிருக்கு இலவசப் பயணம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த பிறகு அதிகமாக மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 5E, 11G, 12G, 70C, 17D, S26, S86 ஆகிய பேருந்துகளையும் அரசு அதிகமாக இயக்கித் தருமா என்று கேட்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீனமயமாக்கல் திட்டத்தில் பேருந்து நிலையங்கள், பணிமனைகள் எல்லாம் வணிக வளாகங்களுடன்கூடிய வசதிகளுடன்தான் அமைக்கப்பட இருக்கின்றன. எனவே, அதில் புதிதாக என்ன வசதிகள் வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்துமூலம் அளித்தால், அதற்கும் சேர்த்து நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அவர் குறிப்பிட்ட பேருந்து வழித்தடங்களை எழுத்து மூலமாக அளித்தால் அந்த வழித்தடங்களை நீட்டிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது கூடலூர் தொகுதியில் அமைந்திருக்கக்கூடிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சுமார் 25 கிலோ மீட்டர் சுற்றளவிலிருந்து 3,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் தினந்தோறும் வருகை தருகின்றார்கள். எனது தொகுதி வன விலங்கு நடமாட்டம் அதிகமுள்ள தொகுதி என்ற வகையில் முறையான பேருந்து வசதி இல்லாத காரணத்தினால், அந்த மாணவர்கள், குறிப்பாக மாணவிகள் இரவு 9 மணி வரை வீடுகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. பல பேருந்துகள் நடுவழியில் பழுதாகிவிடுகின்ற சூழ்நிலையும் நிலவுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு அதனைத் தீர்த்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அளவில் கல்லூரிகள் இருக்கின்ற வழித்தடங்களில் கூடுதல் பேருந்து வசதி வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து எழுந்து வருகிறது. அதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசுப் பள்ளிகளில் படித்து, கல்லூரி படிப்பில் சேரும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்க இருக்கின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கின்ற சூழ்நிலையில், அந்தக் கல்லூரியில் இன்னும் கூடுதல் மாணவியர் எண்ணிக்கை வரும் என்கின்ற சூழல் இருக்கிறது. எனவே, இதனைக் கணக்கில் கொண்டு அந்தக் கல்லூரிக்குக் கூடுதல் பேருந்து வசதி தேவைப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வழித்தடங்கள் எண் 9, 24, 37*D *என இந்த 3 பேருந்துகளும்* Egmore *தொகுதிக்குட்பட்ட* Spur Tank Road *வழியாகச் சென்று கொண்டிருந்தன. ஒருவழிச் சாலையாக்கப்பட்ட பிறகு இவையெல்லாம் நிறுத்தப்பட்டன. மீண்டும் இருவழிச் சாலையாக ஆக்கப்பட்ட பிறகும்கூட இந்தப் பேருந்துகள் இந்த வழித்தடங்கள் மூலமாக இயக்கப்படவில்லை. எனவே, மீண்டும் இந்த வழித்தடப் பேருந்துகள்* Spur Tank Road *வழியாக இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல,* Spur Tank *சாலை தற்போது இருவழித் தடமாக்கப்பட்டிருக்கிறது. எனவே, பயணிகள் வசதிக்காக அங்கே பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். என்னுடைய சொந்த ஊரான ஓரடியம்புலத்திலிருந்து சென்னைக்கு கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து பேருந்து இலாபகரமாக இயக்கப்பட்டது. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏன் நிறுத்தப்பட்டது என்று கேட்டபோது, கும்பகோணம் கோட்டத்திலிருந்து இயக்கப்பட்ட அரசுப் பேருந்தை தூரம் அதிகமாக இருப்பதால் நிறுத்தியிருக்கிறோம்; விரைவுப் பேருந்து இயக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அரசு விரைவுப் பேருந்து இதுவரை இயக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை இயக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் ஏற்கெனவே எழுத்து மூலமாக இந்தக் கோரிக்கையை அளித்திருக்கின்றார்கள். அதுகுறித்து ஆய்வு செய்வதற்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு அதை அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் நல்லச் சூழலை ஏற்படுத்துவதற்கு முனைவோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லப்பாக்கம் பகுதியில் குடிதண்ணீர் எவ்வளவு முக்கியமோ அதேபோல் Mini பேருந்து வசதியும் அவசியம். Mini பேருந்து வழித்தட எண்கள் S3, S8 ஆகிய இரண்டு பேருந்துகளை ஒரு வருட காலத்திற்கு முன்பே நிறுத்திவிட்டார்கள். தயைகூர்ந்து அந்த இரண்டு பேருந்துகளையும் அந்தப் பகுதி மக்களின் வசதிக்காக மீண்டும் இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. S.R. இராஜா அவர்கள் குறிப்பிட்ட Mini பேருந்துகளை இயக்கக் கோரும் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேலம் தெற்கு தொகுதியில், அம்மாவின் ஆட்சியில் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,* RTO *அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்களையும், சேலம் புறவழிச் சாலையில், அம்மாபேட்டையில் ஒரே இடத்தில் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இந்த 3 அலுவலகங்களுக்கும் பொதுமக்கள் சுலபமாக வந்து செல்ல, சேலம் பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களிலிருந்து, சீலநாயக்கன்பட்டி ரௌண்டானா வழியாக அம்மாபேட்டை வரை புதிய வழித்தடம் ஏற்படுத்தி,* town bus *இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த அலுவலகங்களெல்லாம் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அப்பொழுதே இந்த வழித்தடத்தை அவர்கள் ஏற்படுத்தியிருக்கலாம். இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற பாகுபாடு பார்க்காமல், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற பகுதிகளில் மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்ய எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களால் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட தடம் எண் 576 AC bus இயக்கப்பட்டது. அது கடந்த 10 ஆண்டுக் காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் அந்தப் பேருந்தை காஞ்சிபுரத்திற்கு இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகளில் கிட்டத்தட்ட 340–க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை பரிசீலிக்கப்பட்டு, 200–க்கும் மேற்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடத்திலும் தேவைப்படின் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

249—

திருத்தேரைப் புனரமைத்தல்

***730—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—